# செப்டம்பர் – 10 – திங்கள்

**புனித நிக்கோலா**

**“ஆண்டவரே, நேர்மையாளர்க்கு நீர் ஆசி வழங்குவீர்”– திபா 5 : 12**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 5 : 1 – 8

சகோதர சகோதரிகளே உங்களிடையே பரத்தைமை உண்டெனக் கேள்விப்படுகிறேன். ஒருவன் தன் தந்தையின் மறுமனைவியை வைத்துக் கொண்டிருக்கிறானாம். இத்தகைய பரத்தைமை பிற இனத்தாரிடையே கூடக்காணப்படவில்லை. இதை அறிந்தும் நீங்கள் இறுமாப்புடன் இருப்பது எப்படி? துயரமடைந்திருக்க வேண்டாமா? இப்படிச் செய்தவனை உங்கள் நடுவிலிருந்து தள்ளி வைத்திருக்கவேண்டாமா? நான் உடலால் உங்களோடு இல்லாவிடினும் உள்ளத்தால் உங்களோடு இருக்கிறேன். நான் உங்களோடு இருப்பதாக எண்ணி அச்செயலைச் செய்தவனுக்கு ஏற்கெனவே தீர்ப்பு அளித்துவிட்டேன். நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால் நீங்கள் கூடிவரும்போது நானும் உள்ளத்தால் உங்களோடு இருப்பேன். அப்போது நம் ஆண்டவர் இயேசுவின் வல்லமையோடு, அத்தகையவனைச் சாத்தானிடம் ஒப்புவிக்க வேண்டும். அவனது உடல் அழிவுற்றாலும் ஆண்டவரின் நாளில் அவன் மீட்படைவதற்காக இவ்வாறு செய்வோம். நீங்கள் பெருமை பாராட்டுவது நல்லதல்ல. சிறிதளவு புளிப்புமாவு, பிசைந்த மாவு முழுவதையும் புளிக்கவைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? எனவே புளிப்புச்சத்துள்ள பழையமாவைத் தூக்கி எறிந்து விடுங்கள். அப்போது நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருப்பீர்கள். உண்மையில் நீங்கள் புளிப்பற்ற மாவாய்த்தான் இருக்கிறீர்கள். ஏனெனில் நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் பழைய புளிப்பு மாவைத் தவிர்க்கவேண்டும். தீமை, பரத்தைமை போன்ற புளிப்பு மாவோடு அல்ல, மாறாக நேர்மை, உண்மை போன்ற புளிப்பற்ற அப்பத்தோடு பாஸ்காவைக் கொண்டாடுவோமாக.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது நீதியின் பாதையில்
என்னை நடத்தும்

## நற்செய்தி : லூக்கா 6 : 6 – 11

அக்காலத்தில் ஓய்வுநாளில் இயேசு தொழுகைக் கூடத்திற்குள் சென்றுகற்பித்தார். அங்கே வலக்கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவிடம் குற்றம்காணும் நோக்குடன், ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தனர். இயேசு அவர்களுடைய எண்ணங்களை அறிந்து, கை சூம்பியவரை நோக்கி, ”எழுந்து நடுவே நில்லும்!” என்றார். அவர் எழுந்து நின்றார். இயேசு அவர்களை நோக்கி, ”உங்களிடம் ஒன்று கேட்கிறேன் ஓய்வுநாளில் நன்மைசெய்வதா, தீமைசெய்வதா? உயிரைக்காப்பதா, அழிப்பதா? எதுமுறை?” என்றுகேட்டார். பிறகு அவர் சுற்றிலும் திரும்பி அவர்கள் யாவரையும் பார்த்துவிட்டு, ”உமது கையைநீட்டும்!” என்று அவரிடம் கூறினார். அவரும் அப்படியே செய்தார். அவருடைய கை நலமடைந்தது. அவர்களோ கோபவெறி கொண்டு இயேசுவை என்ன செய்யலாம் என்று ஒருவரோடு ஒருவர் கலந்து பேசினர்.

**தியானம்:** நாம் தாழ்வு மனப்பான்மையோடு வாழ்ந்தால் அதிலிருந்து மீண்டு வெளியே வரவேண்டும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மதிப்பளிக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இன்று எம்மிடையே தாழ்வு மனப்பான்மையினால் பலர் சிக்கித்தவிக்கும் சூழ்நிலையில் லூக்கா நற்செய்தியில் இயேசுவின் அழியா வார்த்தைகள் தாழ்வு மனப்பான்மையைப் போக்கக்கூடிய விதத்தில் அமைந்திருப்பதை சுட்டிக் காட்டுகிறது. அன்பு எனப்படுவது எமது உணர்வுகளின் வெளிப்பாடு. இயேசு இந்த உலகத்தில் ஒவ்வொருவரையும் முழுமையாக அன்பு செய்பவர். தாழ்த்தப்பட்டோர், ஏழைகள், அடிமைகள், நோயாளிகள் என்று சமுதாயம் ஒதுக்கி வைத்திருந்த விளிம்புநிலை மக்களை இயேசு தாமாகவே சந்தித்து, அவர்களும் கடவுளின் பிள்ளைகள், அவர்களுக்கும் கடவுளின் அன்பு கிடைக்கிறது என்பதை நிறைவோடு வாழ்ந்து காட்டியதனை லூக்கா நற்செய்தி தெளிவுபடுத்துகிறது. சூம்பிய கை உள்ள மனிதரை ஓய்வுநாளில் குணப்படுத்தப் போகிறேன் என்பது இயேசுவுக்குத் தெரியும். தான் செய்யப்போகிற ஒவ்வொன்றிலும், குற்றம் காண்பதற்காக பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இயேசுவுக்குத் தெரியும். இயேசு நினைத்திருந்தால், சூம்பிய கை உள்ள மனிதரை தனியே மறைவாகக் குணப்படுத்தியிருக்கலாம். ஆனால், அனைவருக்கும் முன்னிலையில் இயேசு குணப்படுத்தி கை சூம்பிப்போயிருக்கிற மனிதருக்கு மட்டுமல்ல, தன்னிடத்தில் குற்றம் காண்கிற எமக்கும் பாடம் கற்பிக்க நினைக்கிறார் என்பதனை லூக்கா நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. நாம் அனைவருமே இறைவனின் சாயலைத் தாங்கியிருக்கிறோம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மதிக்கப்படத் தகுதியுள்ளவர்களாதலால், நாமும் இறை இயேசுவில் உறுதிபெறுவோம். எமது கத்தோலிக்க வாழ்வு ஒரு புனிதமான வாழ்வு மட்டுமல்ல, மரபுகளையெல்லாம் கடந்து மற்றவர்களை புனித நிலைக்கு உயர்த்த உதவுகிற வாழ்வு என்பதனை நம்பி விசுவசித்து ஏற்றுக்கொள்வோம். இயேசு புனித வாழ்வு மாத்திரம் வாழவில்லை. மாறாக, அதிலும் மேலான உன்னதமான பரிசுத்த வாழ்வு வாழ்ந்தவர். அதனால், தன்னைப்பின்தொடரும் ஒவ்வொருவரையும் புனித வாழ்விற்கு அழைத்துச்சென்றார். நாமும் அவர் காட்டித்தந்த வழியில் வாழ்ந்து நித்தியத்திற்கும் வாக்களிக்கப்பட்ட புனிதத்தை அடைய முயல்வோம்.